**செய்தி வெளியீடு**

**எண்.50** **தேதி 03.06.2020**

**தாழ்வழுத்த மின்நுகர்வோர்களின் கவனத்திற்கு**

கோவிட்–19 பரவுதலால் 24.03.2020 நள்ளிரவு முதல் ஊரடங்கு அமலில் உள்ளது. தற்போது தமிழ்நாடு அரசு ஊரடங்கினை மேலும் 30.06.2020 வரை சில கட்டுப்பாடுகள் மற்றும் தளர்வுகளுடன் நீட்டித்து உத்தரவிட்டுள்ளது.

இதைத் தொடர்ந்து, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, மாண்புமிகு அமைச்சர், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அவர்களின் வழிகாட்டுதலின்படி, 25.03.2020 முதல் 05.07.2020 வரை மின்கட்டணம் செலுத்த கடைசி தேதி உள்ள சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் செங்கல்பட்டு ஆகிய மாவட்ட தாழ்வழுத்த (LT/LTCT) நுகர்வோர்கள் தங்களது மின்இணைப்பிற்கான மின்கட்டணத்தை 06.07.2020 வரை தாமத கட்டணம் மற்றும் மறு மின்இணைப்பு கட்டணமின்றி செலுத்தலாம் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

தமிழகத்தில் சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களை தவிர்த்து மற்ற மாவட்டங்களில் உள்ள தாழ்வழுத்த (LT/LTCT) நுகர்வோர்களின் மின்கட்டணம் செலுத்தும் கடைசி தேதி 25.03.2020 முதல் 14.06.2020 வரை இருப்பின் அவர்கள் 15.06.2020 வரை தாமத கட்டணம் மற்றும் மறு மின்இணைப்பு கட்டணமின்றி செலுத்தலாம் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

தமிழகத்தில் சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களை தவிர்த்து மற்ற மாவட்டங்களில் உள்ள தாழ்வழுத்த (LT/LTCT) நுகர்வோர்களின் மின்கட்டணம் செலுத்த கடைசி தேதி 15.06.2020 அன்று மற்றும் அதற்கு பிறகோ இருப்பின் அவர்கள் தங்களுக்குரிய கடைசி தேதிக்குள் செலுத்த வேண்டும். அவர்களுக்கு மின்கட்டணம் செலுத்த காலநீட்டிப்பு வழங்கப்படமாட்டாது.

தமிழகத்தில் உள்ள அனைத்து உயரழுத்த நுகர்வோர்களை பொருத்தவரை (HT) தமிழ்நாடு மின்சார வாரியம் தனது மின் துண்டிப்பிற்கான உரிமையை விட்டு கொடுத்ததினால் பிப்ரவரி 2020, மார்ச் 2020, ஏப்ரல் 2020 மாதத்திற்கான மின்கட்டணத்தை முறையே 03/2020, 4/2020 மற்றும் 5/2020–ல் செலுத்தாமல் இருப்பின் அந்த உயர் மின்னழுத்த நுகர்வோர்கள் தங்களது கட்டணத்தை 15.06.2020–க்குள் செலுத்தலாம். அவர்களுக்கு மின் துண்டிப்பு மற்றும் மறு இணைப்பு கட்டணம் வசூலிக்கப்படமாட்டாது. மே 2020 மாத உயர் மின்னழுத்த மின் கட்டணத்தை நுகர்வோர்கள் அந்த மாதத்திற்கான குறிப்பிட்ட கெடு தேதிக்குள் செலுத்த வேண்டும் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

**தலைமை நிதிக்கட்டுப்பாட்டு அலுவலர்/வருவாய்**

**வெளியீடு: தலைமை மக்கள் தொடர்பு அலுவலகம்,**
**தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், சென்னை–2.**

**TANGEDCO**

**PRESS RELEASE – 50** **Date: 03.06.2020**

**ATTENTION OF TANGEDCO's LOW TENSION CONSUMERS**

In view of the COVID-19 outbreak, there has been lock down since 24.03.2020 midnight. Now, the Government of Tamil Nadu has announced extension of lockdown for a further period up to 30.06.2020 with certain restrictions & relaxations.

In this connection, as per the instructions of Hon'ble Chief Minister of Tamil Nadu and with the guidance of Hon'ble Minister for Electricity, Prohibition and Excise, GoTN extension of time for payment of all LT and LTCT consumers located in Chennai, Kanchipuram, Tiruvallur & Chengalpattu Districts whose last date for payment falls between 25.03.2020 to 05.07.2020 shall be granted up to 06.07.2020, without levy of BPSC and DC-RC fees.

In respect of the LT & LTCT consumers located in the districts of Tamil Nadu other than Chennai, Kanchipuram, Tiruvallur & Chengalpattu whose due dates fall between 25.03.2020 to 14.06.2020 shall be granted up to 15.06.2020, without levy of BPSC and DC-RC fees. If the last date for payment of CC Charges fall on or after 15.06.2020 they shall pay the CC charges on their respective dates and no time extension for them shall be granted.

In respect of the HT services which have not made payment within the due dates for the HT assessment months 02/2020, 03/2020 & 04/2020 payable during March 2020, April 2020 and May 2020 respectively and for which TANGEDCO has foregone its right to disconnect, such HT services can make the payment upto 15.06.2020 without disconnection and payment of DCRC fees. In respect of HT assessment month for the bill month of May 2020, the amount has to be paid within the respective due dates.

Chief Financial Controller/Revenue

**Issued by :Chief Public Relations Office**
**TANGEDCO / CH-2.**